[7th July 1962

திரு. மீ. கல்யாணசுந்தரம் : ஜனாதிபதியின் அங்கீகாரம் பெறுவதில் கால தாமதம் ஏற்பட்டது என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். அதை உணரும்போதுகூட இன்னும் வேகமாகக் காரியங்கள் செய்திருக்க முடியும். உச்சவரம்புச் சட்டத்தின்படி, தங்கள் கணக்குகளை உடனே கொடுக்க வேண்டுமென்ற பிரகடனத்தையாவது வெளியிட்டிருக்கலாம். அதைக்கூட வெளியிடாது காலதாமதம் செய்வதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. வி. ராமையா : அதற்கு வேண்டிய முயற்சிகள் நடந்துகொண்டிருக்கின்றன.

Sri C. CHIRANJEEVULU NAIDU : May I know whether the mode of compensation contemplated under the Act is such that, landowners who will be affected by the Ceiling Act, will be facilitated by the rules that would be framed under the Ceiling Act?

The Hon. Sri V. RAMAIAH : I would request the hon. Member to wait till the rules are framed.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : இந்தச் சட்டத்தினுடைய நோக்கத்தைத் தோற்கடிக்கும் வகையில் சில பெரிய நிலச்சுவாந்தார்கள் 1960-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ம் தேதிக்கு முன்னல் கர்ப்பத்தில் இருக்கும் தங்கள் குழந்தைகளுக்குக்கூட 30 ஏக்கர் என்று பிரித்து வைத்திருக்கிறார்களே அதையெல்லாம் நீக்கிவிட்டு இந்தச் சட்டத்தை அமுல் நடத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொள்வார்களா ?

கனம் திரு. வி. ராமைய்யா : இந்தச் சட்டம் இந்தச் சபையில் நிறைவேற்றப்பட்டபோது கனம் அங்கத்தினர் இந்தச் சபை அங்கத்தினராக இல்லாத காரணத்தினால் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். இந்தச் சபையில்தான் அந்த முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. மீ. கல்யாணசுந்தரம் : இந்தச் சட்டம் அமுலுக்கு வரும் வேகத்தைப்பார்த்தால் நிலத்திலிருந்து விவசாயிகளை மூன்று வருடத்திற்கு வெளியேற்றக் கூடாது என்று நாம் கொண்டுவந்த சட்டமே காலாவதியாகிவிடும் என்று ஊகிக்க வேண்டியிருக்கிறது. அந்தக் காலாவதிச் சட்டத்தை நீடிப்பதற்காவது உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

கனம் திரு. வி. ராமைய்யா : அப்படி ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் அதையும் அரசாங்கம் கவனிக்கும்.

தொழிற்பேட்டை, தஞ்சை.

*175 கேள்வி—**திரு. மு. கருணாநிதி :** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சையில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்பண்ணையில் நடைபெறும் தொழிற்சாலைகளின் விவரமென்ன ?

7th July 1962]

(இ) அதில் (1) அரசினர் நடத்தும் தொழிற்சாலைகள், (2) தனியார் துறை தொழிற்சாலைகள் எவை எவை?

(உ) அந்தத் தொழிற்பண்ணை அமைக்கக் கட்டப்பட்டுள்ள, கட்டிட செலவு எவ்வளவு?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) The following six industries have been allotted factory space in the Industrial Colony, viz.—

(1) Sheet tack and panel pins.
(2) Huller screens and spare parts, foundation bolts
(3) Steel cased aluminium conductor.
(4) Brassware and hospital equipments.
(5) Gout and shoe tacks, card-board boxes and cycle Components.

(6) Wire drawing and galvanizing of bolts, nuts and buckets. Out of the above, only one industry, viz., Huller screens and spare parts and foundation bolts, has started production. Two industries, viz., brassware and hospital equipments and wire drawings and galvanising of bolts, nuts and buckets, have erected their machinery and will commence production soon. The rest are awaiting supply of machinery and raw materials.

(*b*) All the six factory units in the Industrial Colony are allotted to private industrialists. The Government Cycle Assembly Unit, Thanjavur, is located inside this colony.

(*c*) Rs. 3,47,536.

திரு. மு. கருணாநிதி: அந்தத் தொழிற்பண்ணையில் ஒரு நாளைக்கு எத்தனை சைக்கிள்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: சாதாரணமாக அதிலே வருஷத்தில் ஆறுயிரம் சைக்கிள்கள் உற்பத்தி செய்வதாகத் திட்டம். இப்போது எவ்வளவு செய்திருக்கிறார்கள் என்ற புள்ளி விவரம் கொண்டுவரவில்லை. அதற்குத் தனிக் கேள்வி போட்டால் விவரம் கொடுக்கிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன்: அங்கு செய்யப்படுகிற சைக்கிள் கட்டுப்படியாகிறதா? அல்லது நஷ்டக் கணக்கா?

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: ஒரு வருடம் முடிந்த பின்பு தான் கணக்குப் பார்க்க வேண்டும். ஆரம்பிக்கிறபோதே லாபக் கணக்கா, நஷ்டக் கணக்கா என்று எப்படிச் சொல்ல முடியும்?

திரு. ம. கமலநாதன்: கிருஷ்ணகிரியில் தொழில் பண்ணை ஏற்படுத்தப்போவதாக முன்பு கூறப்பட்டிருந்தது. அது எப்போது ஆரம்பிக்கப்படும்?

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: இது தஞ்சாவூரைப் பொறுத்த கேள்வி.

திரு. மு. கருணாநிதி: தஞ்சையில் அமைக்கப்பட்டுள்ள தொழில் பண்ணையில் உள்ள சைக்கிள் தொழிற்சாலையில் நாள் ஒன்றுக்கு ஏறத்தாழ 10 சைக்கிள்களுக்கும் குறைவாகத்தான் உற்பத்தி
9-00 a.m. செய்யப்படுகிறது என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா, இந்த விகிதத்தில் உற்பத்தி செய்யப்படுமானல் கனம் அமைச்சர் அவர்கள் கூறியபடி 6,000 சைக்கிள்களை ஆண்டு ஒன்றுக்கு உற்பத்தி செய்ய முடியுமா?

கனம் திரு. ஆர். வெங்கடராமன்: இந்த சைக்கிள் தொழிற்சாலை இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. எந்த பாக்டரியாக இருந்தாலும், பல கோடி ரூபாய் செலவழித்து ஆரம்பிக்கப்பட்டதாக இருந்தாலும், ஆரம்ப காலத்தில் உற்பத்தி குறைவாகத்தான் இருக்க முடியும். கொஞ்சம், கொஞ்சமாகத்தான் உற்பத்தி பெருகும்.

Obstruction of channel roads (Kanyakumari district)

*176 Q.—SRI A. SWAMIDHAS (on behalf of SRI A. KUNJAN NADAR): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Government are aware that stones are planted in the middle of channel-roads in the Kanyakumari district to obstruct vehicular traffic; and

(b) whether the public are put to any inconvenience thereby?

THE HON. SRI V. RAMAIAH: (a) Yes, Sir.

(b) The channel banks of the Kodayar Irrigation system are not intended for public traffic, but movement of carts for carrying iamanure and the yield during the harvesting season is permitted.

விவசாயத் தொழிலாளர்கள் (ஊதியம்)

*177 கேள்வி.—திரு. கோ. சி. மணி: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விவசாயத் தொழிலாளர்களுக்கென குறைந்தபட்ச கூலி நிர்ணயச் சட்டம் அமுலில் இருக்கிறதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: Yes Sir.

நில ஆர்ஜிதம் (சைதாப்பேட்டை தாலுகா)

*178 கேள்வி.—திரு. முனு. ஆதி: கனம் பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) Land Acquisition Act, 1894-ன்படி இதுவரை சைதாப்பேட்டை தாலுகாவில் அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ள நன்செய், புன்செய் நிலங்கள் எவ்வளவு?

(இ) இதனல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எத்தகைய நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது?

(உ) மக்கள் குடியிருப்பு பகுதிகளையும் அரசாங்கம் எடுத்துக் கொண்டுள்ளதா?

(எ) அப்படியானல், அவர்கள் குடியிருப்பதற்கு வேறு வசதி செய்துதரப்பட்டுள்ளதா?